கொள்கைகள் என்பது மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும்

இலட்சக்கணக்கான 'காசி'களைக் கொண்டது தி.மு.க.!

வாடிப்பட்டி ஒன்றியக் கழக மூத்த முன்னோடியுடன் சந்திப்பு குறித்து

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு பெருமிதம்!









சென்னை, நவ. 6-

"கொள்கைகள் என்பது மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும் இலட்சக்கணக்கான காசிகளைக் கொண்டது தி.மு.கழகம்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியக் கழக மூத்த முன்னோடியுடனான சந்திப்பு குறித்து உணர்ச்சியுடன் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஒன்றியம் தென்கரை கிளையைச் சேர்ந்தவர் கே.காசி. கடந்த 1966ஆம் ஆண்டு தென்கரை கிளை தொடங்கப்பட்டது முதல் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். மிசா சிறைவாசம் தொடங்கி, தி.மு.க. சார்பில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கேற்று சிறைக்கு சென்றுள்ளார். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்திக்க வேண்டும் என்று அவர் வைத்த கோரிக்கை சமூக வலைதளங்களில் வைரலானது. இதையடுத்து, தி.மு.க. மூத்த நிர்வாகி காசியை தனது ஆழ்வார்பேட்டை இல்லத்திற்கு நேரில் அழைத்து தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடி புத்தகங்களைப் பரிசாக வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக மூத்த முன்னோடி காசி., தி.மு.க. தலைவரை, சந்தித்தது, மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பதாக கூறினார். தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும் என்றும் அவர் உறுதிபட கூறினார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

வெறும் கொடியேந்தி நிற்பவர்களல்ல; கொள்கையேந்தி வாழ் பவர்கள்தான் தி.மு.க.வினர்! அதற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மதிப்பிற்குரிய காசி அவர்களைச் சந்தித்தேன்.

முரசொலியை தனது அரசியல் பாடசாலையாக்கியவர்!

தந்தை பெரியாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு, முரசொலியைத் தனது அரசியல் பாடசாலையாக்கி, சாதி மறுப்புத் திருமணத்தை மனமுவந்து வரவேற்று, பெருமிதத்துடன் கொண்டாடிய அவரது கண்களில் கலைஞரின் சிரிப்பைக் கண்டேன்!

கொள்கைகள் என்பவை மேடைகளில் பேசுவதற்கு மட்டுமல்ல; வாழ்ந்து காட்டுவதற்கும் என்பதை உணர்த்தும் இலட்சக்கணக்கான காசிகளைக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்!

கற்றுக்கொள்ள ஏராளம் இருக்கிறது!

உழைப்பாலும் தியாகத்தாலும் கழகத்தை வளர்த்தெடுத்த இத்தகைய தொண்டர்களின் வாழ்விலிருந்து, கழகத் தலைவரான நான் உட்பட, தலைமை முதல் கடைக்கோடித் தொண்டர் வரை, மூத்த முன்னோடிகள் முதல் புதிதாகக் களம் காணும் இளைஞர்கள் வரை, அனைவரும் கற்றுக்கொள்ள ஏராளம் இருக்கிறது!

அன்புநிறை காசி அவர்களை வழியனுப்பிய பின்னும், அவருடனான உரையாடல் உள்ளத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

